ஊத்துக்குளி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.கெ.மனோகரன்

நாள்: 16.07.2018

ந.க.எண்: 1810/2017/ஆ2,

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017 - திருப்பூர் மாவட்டம் - ஊத்துக்குளி வட்டாரம் அனுமதியற்ற மனைப்பிரிவில் 20.10.2016 க்கு முன்னர் பதிவு மேற்கொண்ட மனைகளை வரன்முறைப்படுத்துதல் - வரன்முறைப்படுத்துதலுக்கு உண்டான மனைகளை உரிய கட்டணங்களை செலுத்த உத்திரவிடப்பட்டது - தொகை செலுத்தப்பட்டது - வரன்முறை படுத்தி உத்திரவிடுதல் தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் - 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3) ) துறை நாள் :04.05.2017.
2. அரசாணை (நிலை) எண் - 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3) ) துறை நாள் :13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர் , சென்னை - 2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண் : 13193/2017 எல் .ஏ.2 நாள் :30.10.017,31.10.2017, மற்றும் 07.11.2017
4. திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம் , அவர்களின் கடித ந.க.எண்:510/2018/திஉதிகு, நாள்: 26.04.2018
5. ம.வ.(R) திஉதிகு. எண். 68/2018

*****

உத்தரவு:

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் அரசாணைகளின் படி , திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டாரம் சர்க்கார் பெரியபாளையம் ஊராட்சி ரீ.ச.எண்:/ச.எண்: 78/2, 78/1 78/3ஏ, 78/2டி. 91/2டி, 91/2சி ல் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள மனையினை வரன்முறைப்படுத்த தனி மனை விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு , பார்வை (4) ல் காணும் திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டடுள்ளது . எனவே தனி மனை வரன்முறை படுத்தும் பொருட்டு கீழ்க்கண்டவாறு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் உரிய கணக்கில் செலுத்தியுள்ளார்.

| வ. எண் | மனைப்பிரிவின் பெயர் / முகவரி | க.ச.எண் / ரீ.ச.எண்/ ச.எண் | மனை எண் / பெயர் | பரப்பளவு (ச.மீ) | செலுத்த வேண்டிய வரன்முறை கட்டணம் (ரூ.30/ச.மீ) | செலுத்த வேண்டிய வளர்ச்சி கட்டணம் (ரூ.25/ச.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ காயத்திரி நகர் | 78/2, 78/2சி, 78/3எ, 78/2டி, 91/2டி, 91/2சி | 1 | 288.74 | 132705 | 110587 |
| 2 | | | 1எ | 222.96 | | |
| 3 | | | 2 | 222.96 | | |
| 4 | | | 5 | 167.22 | | |
| 5 | | | 6 | 167.22 | | |
| 6 | | | 7 | 167.22 | | |
| 7 | | | 8 | 195.09 | | |
| 8 | | | 9 | 299.51 | | |
| 9 | | | 10 | 238.29 | | |
| 10 | | | 11 | 220.92 | | |
| 11 | | | 12 | 233.64 | | |
| 12 | | | 13 | 280.47 | | |
| 13 | | | 14 | 222.96 | | |
| 14 | | | 15 | 222.96 | | |
| 15 | | | 16 | 359.53 | | |
| 16 | | | 17 | 587.23 | | |
| 17 | | | 18 | 326.55 | | |

எனவே மேற்படி கட்டணங்கள் யாவும் செலுத்தப்பட்டுள்ளதால் சர்க்கார்பெரியபாளையம் ஊராட்சி சர்வே எண் / ரீ.ச.எண் / ச.எண் : 78/2, 78/2 சி, 78/3எ, 78/2டி, 91/2டி. அமைந்துள்ள **ஸ்ரீ காயத்திரி நகர்** - ல் திரு. D. ஜெகதீஸ், 9, 5-வது தெரு, நேதாஜி நகர் கருமாரம்பாளையம்,திருப்பூர் என்பவருக்கு சொந்தமான மனை எண்: 1, 1எ, 2, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, ஐ வரன்முறை படுத்தி இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

பார்வை(2) ல் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் இதற்கு பொருந்தும் .

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
ஊத்துக்குளி.

16/7/18.

பெறுநர்
திரு D.ஜெகதீஸ், 9, 5-வது தெரு, நேதாஜி நகர், கருமாரம்பாளையம்,திருப்பூர்

நகல்:

1.மாவட்ட ஆட்சித் தலைவர் , திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.

2.தனி அலுவலர் ஏ.பெரியபாளையம் ஊராட்சி (இருப்பு கோப்பிற்கு).

7a (94)

திருப்பூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:திரு.சி.மதிவாணன் பி.இ.,

ந.க.எண். 510/2018/ திஉ திகு நாள்: 26.04.2018

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன் முறைப்படுத்துதல் திட்டம் 2017-திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்-திருப்பூர் மாவட்டம்- ஊத்துக்குளி வட்டம், சர்கார் பெரியபாளையம் கிராமம் க.ச.எண்.78/2, 78/3, 78/2D, 91/2D - பரப்பு 6100.00 ச.மீ- "Sri Gayathri Nagar" என பெயரிடப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தப்பட்டு கொள்கை அளவிலான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்:78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை ந.வ.4(3) நாள்:4.5.2017
2. அரசாணை (நிலை) எண்:172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை ந.வ.4(3) நாள்:13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை - 2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்:13193/2017/LA2 நாள்:30.10.2017,31.10.2017 மற்றும் 07.11.2017.
4. திரு.D.ஜெகதீஷ், திருப்பூர் என்பவரின் விண்ணப்பம் நாள். 23.03.2018

உத்தரவு:

பார்வை (1) மற்றும் (2) -ல் கண்டுள்ள அரசாணைகளின் படியும், பார்வை (3) -ல் கண்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)-ல் கண்டுள்ள உதவி ஆணையர், திருப்பூர் மாநகராட்சி அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

உள்ளூர் திட்டக் குழுமத்திற்குட்பட்ட திருப்பூர் மாவட்டம்-ஊத்துக்குளி வட்டம் - சர்கார் பெரியபாளையம் கிராமம் க.ச.எண்.78/2, 78/3, 78/2D, 91/2D - பரப்பு 6100.00 ச.மீ- "Sri Gayathri Nagar" என பெயரிடப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டு கொள்கை அளவிலான தொழில்நுட்ப ஒப்புதல் ம.வ.(வ)/திஉ திகு எண்: **68/2018** என எண்ணிடப்பட்டு(In-Principle Approval) கீழ்காணும் நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **மனைப்பிரிவு பரப்பு** | : | **6100.00ச.மீ** |
| **மொத்த மனைகள்** | : | **19** |
| **விற்கப்பட்ட மனைகள்** | : | **1 (மனை எண்.3)** |
| **விற்கப்படாத மனைகள்** | : | **18(மனை எண்கள்.1,1A,2,4 முதல் 18 வரை)** |
| **பூங்கா ஒதுக்கீடு** | : | **462.00ச.மீ (பூங்கா)** |

**நிபந்தனைகள்**

1. **கூராய்வுக் கட்டணம்:**
பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின் விதி எண்:12-ன் படி கூராய்வுக் கட்டணமாக ஒரு மனைக்கு ரூ.500/- வீதம் மொத்தம் ரூ.9,500/- இணைய தளத்தின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒவ்வொரு மனைக்கும் ரூ.500/- வீதம் பரிசீலனை கட்டணம் பெற்று திருப்பூர் உள்ளூர் திட்டக் குழும கணக்கு எண்:**1246101004370** திருப்பூர் காமராஜர் சாலையில் உள்ள கனரா வங்கி கிளையில் உறுப்பினர் செயலர் பெயரில் செலுத்தப்படல் வேண்டும்.

2. <u>வரன்முறைப்படுத்துதல் கட்டணம்</u>
ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- (ரூபாய் நூறு மட்டும்) வீதம் கீழ்கண்ட அரசு கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

**<u>Regularisation Charges Head of Accont</u>**
0217 Urban Development – 60 Other Urban Development Schemes-
800 Other receipts AT Receipt under Regularisation Charges of
Unapproved layout and Plots – DTCP
(DPC:0217 60 800 AT 0007)

3. <u>வளர்ச்சிக் கட்டணம்</u>
ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- (ரூபாய் ஐநூறு மட்டும்) வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

4. மனைப்பிரிவில் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றில் மாற்றம் ஏதும் இருப்பின் சரியான விபரங்கள் குறிப்பிட்டு திருத்திய மனைப்பிரிவிற்கு விண்ணப்பித்து உரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

5. As per G.O.Ms.No.172, Housing and Urban Development Department dated 13.10.2017, All the layout road and open space reservation area in the layout as shown in the layout framework shall be deemed to have been vested with the concerned local authority.

6. இம்மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஆகியவற்றினை வருவாய் உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் உரிமையில் வழங்க நில அளவைத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7. தனிமனைகள் உள்ளாட்சியில் முறைப்படுத்தப்படும் போது நில உரிமம் மற்றும் மனை அளவுகள் ஆகியவற்றை ஆவணங்களின் படி உறுதி செய்து தனிமனைகள் முறைப்படுத்தப்பட வேண்டும்.

8. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்படும் இம்மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு மனையினையும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள கட்டணத்தை பெற்று உள்ளாட்சியில் வரன்முறைப்படுத்தப்பட்ட பின்னரே தனி மனைகளை பத்திரப் பதிவு செய்யப்பட வேண்டும்.

9. மனையிடத்தில் நீர்பாசன வாய்க்கால் எதுவும் தடைசெய்யப்படவில்லை/நீக்கம் செய்யப்படவில்லை என்பதனை வட்டாட்சியர் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

26/4/18

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ),
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
திருப்பூர்.
26/04/18

**இணைப்பு:**
மனைப்பிரிவு வரைபடம் - 2 எண்ணம்
பெறுநர்:

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்
ஊத்துகுளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
ஊத்துகுளி

**நகல்:**

1. திரு.D.ஜெகதீஷ்
எண்.9 5 வது தெரு
நேதாஜி நகர்
கருமாரம்பாளையம், மண்ணரை கிராமம்
திருப்பூர்-641403

2. உதவி இயக்குநர்(நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
} சாலை மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு

3. வட்டாட்சியர்
ஊத்துகுளி வட்டாட்சியர் அலுவலகம்
ஊத்துகுளி

4. சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
தெற்கு தெரு
காவல் நிலையம் அருகில்
ஊத்துகுளி-638751
} சாலை மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

5. தொழில்நுட்ப வைப்பறை

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள்
807, அண்ணா சாலை
சென்னை-600 002